# தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம்

எண். 208/2, ஜவஹர்லால் நேரு சாலை, அரும்பாக்கம், சென்னை 600 106

## செய்தி தகவல்

செய்தி தகவல் எண். 11 /2016 நாள் 31.08.2016

### வாக்குச்சாவடி பட்டியல்கள் வெளியிடுதல்

உள்ளாட்சித் தேர்தல் 2016–க்கான உத்தேச வாக்குச்சாவடிகளின் பட்டியல் சம்மந்தப்பட்ட உள்ளாட்சி அமைப்புகளின் தேர்தல் நடத்தும் அலுவலர்களால் தெரிவு செய்யப்பட்டுள்ளன. மேற்படி அலுவலர்கள் கீழ்க்கண்ட கால அட்டவணைப்படி வாக்குச்சாவடி பட்டியல்களை வெளியிட தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையம் கேட்டுக்கொண்டுள்ளது.

**வாக்குச்சாவடி பட்டியல்கள் வெளியிடுவதற்கான கால அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. | வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களுக்கு மாவட்ட தேர்தல் அலுவலர் ஒப்புதல் அளித்தல். | 07.09.2016–க்குள் |
| 2. (அ) | வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை உரியவாறு விளம்பரப்படுத்துதல் | 08.09.2016–க்குள் |
| (ஆ) | நகர்ப்புற உள்ளாட்சிகளுக்கான வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை உள்ளாட்சி மன்றத்தில் வைத்தல் மற்றும் அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உள்ளூர் பிரதிநிதிகளை கலந்தாலோசித்தல். | 12.09.2016–க்குள் |
| (இ) | ஊரக உள்ளாட்சிகளுக்கான வரைவு வாக்குச்சாவடி பட்டியல்களை அங்கீகரிக்கப்பட்ட அரசியல் கட்சிகளின் உள்ளூர் பிரதிநிதிகள், சட்டமன்ற உறுப்பினர்கள் மற்றும் பாராளுமன்ற உறுப்பினர்கள் ஆகியோருடன் கலந்தாலோசிப்பதற்கான கூட்டத்தினை மாவட்ட தேர்தல் அலுவலர் நடத்துதல். | |
| (ஈ) | ஆட்சேபணைகள் கருத்துரைகள் இருப்பின் பரிசீலித்து இறுதிசெய்து, பட்டியல்களுக்கு உரிய திருத்தங்கள் (தேவைப்படின்) மேற்கொள்ளல். | |
| 3. | வாக்குச்சாவடி இறுதிப் பட்டியல்களை வெளியிடுதல் மற்றும் பிரசுரம் செய்தல். | 14.09.2016–க்குள் |
| 4. | வாக்குச்சாவடி பட்டியல்களை அச்சிட்டு முடித்தல் மற்றும் விநியோகித்தல். | 15.09.2016–க்குள் |

இத்தகவல் தமிழ்நாடு மாநில தேர்தல் ஆணையத்தால் தெரிவிக்கப்படுகிறது.

31.08.16

மக்கள் தொடர்பு அலுவலர்